# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2021.10.08 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் 144அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் அச்சட்டத்தைத் திருத்துகின்றதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது, அப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்குவதற்கு நீதிவானுக்குத் தத்துவமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் 4 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 241அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் அச்சட்டவாக்கத்தைத் திருத்துகின்றதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது, அப்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்குவதற்கு மேல்நீதிமன்ற நீதிபதிக்குத் தத்துவமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

**குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)**

*ச.வ.- ஓ. 5/2018*

### 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன் றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 144அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 144 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் இது அச்சட்டத்தின் 144அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

''சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நேரில் வருகைதர வேண்டுமென்ற அவசியம் விசேட சூழ்நிலை களின் கீழ் இல்லாதாக்கப் படலாம்

144அ. (1) நீதிவான், (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, தடுத்து வைத்தல் காலப்பகுதியினை நீடிப்பதற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக, எந்தச் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பில் அத்தகைய நீதிவான் முன்னர் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடங்கப் பட்டிருக்கின்றனவோ அந்தச் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதர வேண்டுமென்ற அவசியத்தை இல்லா தாக்கலாம்.

(2) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது நீதிமன்றத்தில் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதர வேண்டு மென்ற அவசியம் இல்லாதாக்கப்படலாம் என நீதிவான் திருப்திப்படின், (3) ஆம் உட்பிரிவில்

குறித்துரைக்கப்பட்டவாறு, இயைபான ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதரவேண்டுமென்ற அவசியம் அவ்வாறு இல்லாதாக்கப்படலாம்.

(3) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று பின்வருவோரால் செய்யப் படுதல் வேண்டும்:-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(ஆ) விடயத்திற்கேற்ப, சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி;

(இ) இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலர்; அல்லது

(ஈ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்த மறியற்சாலையின்கண் தடுத்துவைக் கப்படுகின்றாரோ அந்த மறியற்சாலையின் கண்காணிப்பாளர்.

(4) நீதிவான் பின்வரும் ஏதுக்களின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் நேரில் வருகைதரவேண்டுமென்ற அவசியத்தை இல்லாதாக்கலாம்:-

(அ) சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட வரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஒன்று உள்ளவிடத்து அல்லது பாரதூரமான தீங்கு விளையுமென்ற பயமுள்ளவிடத்து;

(ஆ) சந்தேகநபரால் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறிற்கான பொதுமக்களின் எதிர்விளைவு சமாதானத்தின் மீறுகை ஒன்றை ஏற்படுத்தக் கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளவிடத்து;

(இ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுப்புக்காவலிலிருந்து தப்பிச்செல்கின்ற அல்லது தடுப்புக் காவலிலிருந்து தன்னிச்சையின்றி அகற்றப்படுகின்ற சாத்தியமுள்ளவிடத்து;

(ஈ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையிடக்கூடிய சாத்தியமுள்ளவிடத்து;

(உ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் உயிருக்கு ஆபத்தான ஒரு தொற்றுநோய் அல்லது தொடுநோய் பரவுவதனைத் தடுப்பதற்கென ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தனிமைப்படுத்தல் நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவிடத்து;

(ஊ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினது ஏற்பாடுகளின் நியதிகளின்படி கட்டாய புனர்வாழ்வளிப்புக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதருகின்றமை அத்தகைய சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் புனர்வாழ்வளிப்புக்கு இடையீடு விளைவிக்குமிடத்தும் சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் வருகையின் நோக்கம் தடுப்புக் காவல் காலப்பகுதியை நீடிப்பதற்காக இருக்குமிடத்தும்; அல்லது

(எ) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதருகின்றமை அப்போதைக்கு நிலவுகின்ற உலகம் பரவுநோய் அல்லது வேறு ஒத்த நிலைமை காரணமாகப் பொதுமக்களின் காப்புக்கும் சுகாதாரத் துக்கும் அச்சுறுத்தலொன்றை ஏற்படுத்தும் சாத்தியங்கொண்டதாகவுள்ளவிடத்து:

ஆயின், எவ்வாறாயினும், (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதுவொன்று உளதாகவிரா தொழிந்துள்ளதென நீதிவான் அபிப்பிராயப் படுமிடத்து, அவர், சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருதல் வேண்டுமெனப் பணிக்கலாமென் பதுடன் இதனகத்துமுன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அவர் வருகைதருவதனையும் வலுவுறுத்த லாம்.

(5) நீதிவானொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் நீதிமன்றத்தில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்குமிடத்து, அதற்கான காரணங்கள் எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் -

(அ) ஒரு சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதற்கு உரிமை கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமகால அல்லது கிட்டிய சமகாலச் செவிப் புல-கட்புல இணைப்பினூடாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் அத்தகைய சந்தேகநபரினால் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவரினால், அவரது சார்பில் அல்லது அவர் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

(6) (அ) நீதிவான் நீதிமன்றப் பதிவாளர், சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அவரது முறையீட்டைச் செய்வதனையும் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதனையும் வசதிப்படுத்துவதற்கு நீதிமன்றத்தில் அவசியமான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் அதன்கண் தடுத்துவைக்கப் படுகின்ற மறியற்சாலையின் கண்காணிப்பாளர், அல்லது அத்தகைய ஆள் அதன்கண் தடுத்து வைக்கப்படுகின்ற தடுப்பிடத்தின் பொறுப்பலுவலர், நீதிவான் நீதிமன்றப் பதிவாளருடனான கலந்தாலோசனையுடன், தடுத்துவைக்கப்பட்டுள்ள அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் நீதிமன்றத்தின் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அவருக்கு அவசியமான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

(இ) இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகத் ''தடுப்பிடம்'' என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் தடுப்புச் செயலிடம் என்று பொருளாகும் என்பதுடன், (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் தனிமைப்படுத்தல் நிலையத்தையும் 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, போதைப்பொருட்களில் தங்கிவாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையத்தையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(7) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம், அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப் பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானின் நீதி முறைப் பிரிவினுள் உள்ளவிடத்து, அத்தகைய நீதிவான், வழக்கைக் கூப்பிட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய தடுப்பிடத்துக்குச் சென்று அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வுபற்றிக் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

(8) அத்தகைய சந்தேகநபர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம், அத்த கைய சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானின் நீதி முறைப் பிரிவுக்கு வெளியே அமைந்துள்ளவிடத்து, இயைபான நீதிமுறைப் பிரிவின்மீது நியாயாதிக் கங்கொண்டுள்ள நீதிவானுடன் விதித்துரைக்கப் பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொள்ளு தலும், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காக, சந்தேக நபரின் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(9) சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம் எந்த நீதிவானின் நீதிமுறைப் பிரிவினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் தடுப்பிடத்துக்குச் செல்வதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வேறெவரேனும் நீதிவானுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுதலும், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காகச் சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிவானின் கடமையாதல் வேண்டும்.

(10) எட்டாம் அல்லது (9) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த நீதிவானுடன் தொடர்புகொள்ளப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் நீதிவான், சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருகின்ற படிவம் கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய இடத்துக்குச் செல்லுதல் வேண்டுமென்பதுடன் சந்தேகநபர் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிவானுக்கு, அத்தகைய சென்றுபார்த்தமை பற்றி அதற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய சென்றுபார்த்தமையிலிருந்து ஒரு வாரத்தினுள் எழுத்தில் மீள அறிக்கையிடுதலும் வேண்டும்.

(11) உட்பிரிவு (7), (8) அல்லது (9) என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஒரு மறியற்சாலைக்குச் சென்றுபார்க்கின்ற நீதிவானின் முன்னர் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட அத்தகைய எவரேனும் சந்தேகநபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரை முன்னிறுத்துதலும் அத்தகைய நீதிவானுக்குத் தேவைப்பட்ட வசதிகளை அவருக்கு வழங்குதலும் அம்மறியற்சாலைக் கண்காணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(12) உட்பிரிவு (7), (8) அல்லது (9) என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நீதிவானொருவர் ஒரு சந்தேகநபரின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வுபற்றிக் கவனஞ்செலுத்துவதற்கு மறியற்சாலையொன்றுக்குச் செல்லுமிடத்து, அத்தகைய சந்தேகநபரை அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவர் அவ்வாறு செல்லும் நேரத்தில் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவைத் திருத்துதல்

*3*. முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''போய்விட்டது எனவும்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''போய்விட்டது எனவும்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:-

''(இ) 241அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, அத்தகைய ஆள் நீதிமன்றத்தில் நேரில் வருகைதரவேண்டிய அவசியம் இல்லாதாக்கப் படுதல் வேண்டும் எனவும்,''.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 241அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

*4*. முதன்மைச் சட்டவாக்கத்தின் 241 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என் பதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 241அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

''குற்றஞ்சாட்டப் பட்டவர் நேரில் வருகைதர வேண்டுமென்ற அவசியம் விசேட சூழ்நிலை களின் கீழ் இல்லாதாக்கப் படலாம்

241அ. (1) இயைபான நீதிமுறை வலயத்தின் மேல்நீதிமன்ற அமர்வுகளுக்குத் தலைமைதாங்கு கின்ற மேல் நீதிமன்ற நீதிபதி, (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, எந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பில் அத்தகைய நீதிமன்றத்தின்முன்னர் ஒரு யூரர் சபையுடனோ அல்லது யூரர் சபையின்றியோ விளக்கமானது முடிவுறாதுள்ளதோ அல்லது தொடங்கியுள்ளதோ அந்தக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருதல் வேண்டுமென்ற அவசியத்தை இல்லாதாக்கலாம்.

(2) நான்காம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்களுள் ஏதேனும் ஒன்றின்மீது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்மீது அத்தகைய குற்றஞ் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதர

வேண்டுமென்ற அவசியம் இல்லாதாக்கப்படலாமென நீதிபதி திருப்திப்படின், (3) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான இயைபான ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதருதல் வேண்டுமென்ற அவசியம் அவ்வாறு இல்லாதாக்கப்படலாம்.

(3) குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒருவர் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று பின்வருவோரால் செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி;

(ஆ) விடயத்திற்கேற்ப, குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி; அல்லது

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் எந்த மறியற்சாலையின்கண் தடுத்துவைக்கப்படுகின்றாரோ அந்த மறியற்சாலையின் கண்காணிப்பாளர்.

(4) நீதிவான் பின்வரும் ஏதுக்களின்மீது (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகைதரவேண்டுமென்ற அவசியத்தை இல்லாதாக்கலாம்:-

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஒன்று உள்ளவிடத்து அல்லது பாரதூரமான தீங்கு விளையுமென்ற பயமுள்ளவிடத்து;

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்டவரால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறிற்கான பொதுமக்களின் எதிர்விளைவு சமாதானத்தின் மீறுகை ஒன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளவிடத்து;

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுப்புக் காவலிலிருந்து தப்பிச்செல்கின்ற அல்லது தடுப்புக் காவலிலிருந்து தன்னிச்சையின்றி அகற்றப் படுகின்ற சாத்தியமுள்ளவிடத்து;

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையிடக் கூடிய சாத்தியமுள்ளவிடத்து;

(உ) குற்றஞ்சாட்டப்பட்டவர் உயிருக்கு ஆபத்தான ஒரு தொற்றுநோய் அல்லது தொடுநோய் பரவுவதனைத் தடுப்பதற்கென ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தனிமைப் படுத்தல் நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ள விடத்து; அல்லது

(ஊ) குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகை தருகின்றமை அப்போதைக்கு நிலவுகின்ற உலகம் பரவுநோய் அல்லது வேறு ஒத்த நிலைமை காரணமாகப் பொதுமக்களின் காப்புக்கும் சுகாதாரத்துக்கும் அச்சுறுத்த லொன்றை ஏற்படுத்தும் சாத்தியங் கொண்டதாகவுள்ள விடத்து:

ஆயின், எவ்வாறாயினும், (4) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதுவொன்று உளதாகவிரா தொழிந்துள்ளதென நீதிபதி அபிப்பிராயப்படு மிடத்து, அவர், குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருதல் வேண்டு மெனப் பணிக்கலாமென்பதுடன் இதனகத்து முன்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அவர் வருகை தருவதனையும் வலுவுறுத்தலாம்.

(5) மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில்

நீதிமன்றத்தில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்குமிடத்து, அதற்கான காரணங்கள் எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் -

(அ) ஒரு சட்டத்தரணிமூலம் நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமகால அல்லது கிட்டிய சமகாலச் செவிப் புல-கட்புல இணைப்பினூடாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரினால், அவரது சார்பில் அல்லது அவர் தொடர்பாகத் தொடுக்கப்பட்ட வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதற்கும் அனுமதிக்கப்படுதலும் வேண்டும்.

(6) (அ) மேல் நீதிமன்றப் பதிவாளர், குற்றஞ் சாட்டப்பட்டவர் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடு களுக்கிணங்க அவரது முறையீட்டைச் செய்வதனை யும் வழக்குநடவடிக்கைகளை அவதானிப்பதனை யும் வசதிப்படுத்துவதற்கு நீதிமன்றத்தில் அவசியமான ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் அதன்கண் தடுத்துவைக்கப்படுகின்ற மறியற்சாலையின் கண்காணிப்பாளர் அல்லது அத்தகைய ஆள் அதன்கண் தடுத்துவைக்கப்படுகின்ற தடுப் பிடத்தின் பொறுப்பலுவலர், மேல் நீதிமன்றப் பதிவாளருடனான கலந்தாலோசனையுடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக அவரது முறையீட்டைச் செய்வதற்கும் நீதி மன்றத்தின் வழக்குநடவடிக்கைகளை அவதானிப் பதற்கும் அவருக்கு அவசியமான வசதிகளை வழங்குதல் வேண்டும்.

(இ) இவ்வுட்பிரிவின் நோக்கத்துக்காகத் ''தடுப்பிடம்'' என்பது, ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் தடுப்புச் செயலிடம் என்று பொருளாகும் என்பதுடன், (222 ஆம் அத்தியாயமான) தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் தனிமைப்படுத்தல் நிலையத்தையும் 2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, போதைப்பொருட்களில் தங்கிவாழும் ஆட்கள் (சிகிச்சையளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஏதேனும் சிகிச்சை யளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல் நிலையத்தை யும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(7) அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்ட இடம், அத்தகைய குற்றஞ்சாட்டப் பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிபதியின் நீதிமுறை வலயத்தினுள் உள்ளவிடத்து, அத்தகைய நீதிபதி, வழக்கைக் கூப்பிட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித் தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய தடுப் பிடத்துக்குச் சென்று அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வு பற்றிக் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

(8) அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்து வைக்கப்பட்ட இடம், அத்தகைய குற்றஞ்சாட்டப் பட்டவர் நீதிமன்றத்தில் நேரில் வருகைதருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிபதியின் நீதிமுறை வலயத்துக்கு வெளியே அமைந்துள்ளவிடத்து, இயை பான நீதிமுறை வலயத்தின்மீது நியாயாதிக்கங் கொண்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதியுடன் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் உடனடியாகத் தொடர்புகொள்ளுதலும், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காக, குற்றஞ் சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(9) குற்றஞ்சாட்டப்பட்டவர் தடுத்துவைக்கப்பட்ட இடம் எந்த நீதிபதியின் நீதிமுறை வலயத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிபதி தடுப்பிடத்துக்குச் செல்வதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, விதித் துரைக்கப்பட்ட படிவத்தில் வேறெவரேனும் மேல் நீதிமன்ற நீதிபதியுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுதலும், (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்துக்காகக் குற்றஞ்சாட் டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருதலும் அத்தகைய நீதிபதியின் கடமையாதல் வேண்டும்.

(10) எட்டாம் அல்லது (9) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த மேல் நீதிமன்ற நீதிபதியுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றஞ்சாட்டப்பட்டவரின் தடுப்பிடத்துக்குச் செல்லும்படி அவரைக் கோருகின்ற படிவம் கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் அத்தகைய இடத்துக்குச் செல்லுதல் வேண்டு மென்பதுடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் நேரில் வருகை தருவதற்கான அவசியத்தை இல்லாதாக்கிய நீதிபதிக்கு, அத்தகைய சென்றுபார்த்தமை பற்றி அதற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய சென்றுபார்த்தமையிலிருந்து ஒருவாரத் தினுள் எழுத்தில் மீள அறிக்கையிடுதலும் வேண்டும்.

(11) உட்பிரிவு (7), (8) அல்லது (9) என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி ஒரு மறியற் சாலைக்குச் சென்றுபார்க்கின்ற நீதிபதியின்முன்னர் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட அத்தகைய எவரேனும் குற்றஞ்சாட்டப்பட்டவரை முன்னிறுத்து தலும் அத்தகைய நீதிபதிக்குத் தேவைப்பட்ட வசதிகளை அவருக்கு வழங்குதலும் அச்சிறைச் சாலைக் கண்காணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(12) உட்பிரிவு (7), (8) அல்லது (9) என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நீதிபதியொருவர் ஒரு குற்றஞ்சாட்டப்பட்டவரின் நல்வாழ்வுபற்றிக் கவனஞ்செலுத்துவதற்குச் மறியற்சாலையொன்றுக்குச் செல்லுமிடத்து குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சட்டத்தரணியொருவர் அவ்வாறு செல்லும் நேரத்தில் சமுகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.